JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, BHAVANI

Deposition of LW- -Pw- 7- Witness
for Prosecution

CC No. 16/2024 Crime No. 164/2023 Station Appakoodal

| Name | Pw. 7 மோகன்ராஜ் | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 04.06.2026 | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் அத்தாணி ஓடைமேட்டில் குடியிருந்து கொண்டு, பழக்கடை வைத்துள்ளேன் . தேதி, மாதம் நினைவில்லை. சுமார் இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலையில் அன்று சரஸ்வதி பூஜை என்பதால் நாங்கள் வீட்டுக்குள் சாமி கும்பிட்டுக் கொண்டிருந்தோம். வெளியில் சத்தம் கேட்டது. வந்து பார்த்த பொழுது எனது வீட்டிற்கு சுமார் 50 மீட்டர் தூரம் தள்ளி எதிர் திசையில் டிராக்டரும், பைக்கும் மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. நான் விபத்து நடைபெற்ற பிறகு தான் வந்து பார்த்தேன். அதனால் விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. பின்னர் அங்கிருந்தவர்களின் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ் மூலமாக அடிபட்டவரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலீசார் என்னிடம் பெயர் மட்டும் கேட்டு எழுதி வாங்கிச் சென்றார்கள்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன்**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை—**

கடந்த 23.10.2023 ஆம் தேதியன்று மாலை சுமார் 06:30 மணியளவில் சக்தி – அந்தியூர் பவானி மெயின் ரோடு, அத்தாணி ஓடைமேடு செம்மணக்கவுண்டர் வீடு எதிரில் நானும், கார்த்திகேயன், அஜித், தினேஷ்குமார் பேசிக் கொண்டிருந்ததாகவும், பின்னர் சதீஷ் பவானி செல்வதற்காக அவரது இரு சக்கர வாகனத்தில் சிவகுமார் என்பவரை பின்னால் அமர வைத்துக்கொண்டு ரோட்டின் இடது ஓரமாக மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி பேரிகார்டை தாண்டி சென்று கொண்டிருந்ததாகவும், அப்போது அவர்களுக்கு எதிரே கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி வந்த கரும்பு டிராக்டர் வண்டியை வலது புறமாக ஓட்டி வந்து சதீஷின் வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டதாகவும், மேற்படி விபத்தை நான் நேரில் பார்த்ததாகவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது ஏதோ ஒரு காரணத்திற்காக எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.04 17:38:45 +0530

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எவ்வாறு விபத்து ஏற்பட்டது என்பது எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான்.

**மறுவிசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.06.04 17:38:51 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani